## கிண்டி – வேளச்சேரி உள்ளிட்ட தென் சென்னை பகுதிகளில் நடைபெறும் பணிகளை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு அறிவுரை !

**சென்னை, அக். 18-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில், சென்னை, கிண்டி ரேஸ் கிளப் பகுதி, வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கால் ஓடை மற்றும் நாராயணபுரம் ஏரி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

**கிண்டி ரேஸ் கிளப் பகுதி**

சென்னை, கிண்டி ரேஸ் கிளப் நிர்வாகத்திற்கு அரசால் குத்தகைக்கு வழங்கப்பட்ட 160.86 ஏக்கர் நிலம் மீளப்பெறப்பட்டு, அந்நிலத்தில் 118 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மிகச் சிறந்த பூங்கா, பசுமை வெளி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் உருவாக்கம் செய்திட தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மேலும், கிண்டி ரேஸ் கிளப் நிர்வாகத்திடமிருந்து மீளப்பெறப்பட்ட அந்நிலத்தில் ஏற்கனவே உள்ள 3 குளங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக ஆழப்படுத்தி அகலப்படுத்தும் பணிகள் மற்றும் புதிதாக 4.24 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட 4 குளங்கள் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த குளங்கள் வெட்டப்படுவதன் மூலம் பிள்ளையார் கோயில் தெரு, மடுவாங்கரை, ஐந்து பர்லாங் சாலை, வண்டிகாரன் தெரு, ரேஸ் கிளப் உட்புறச் சாலை, வேளச்சேரி பிரதான சாலை ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் கிண்டி ரேஸ் கிளப் மழைநீர், மேற்காணும் பகுதிகளுக்கு செல்லாமல் இக்குளங்களிலேயே தேக்கி வைக்கப்படும். இதன்மூலம், அப்பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுவதோடு, போக்குவரத்திற்கு பாதிப்பில்லாமல், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படாமலும் இருக்கும். அத்துடன் அப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டமும் உயரும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் கிண்டியில் நடைபெற்று வரும் அக்குளங்களை வெட்டும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கல் ஓடை**

வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கால் ஓடையின் நீரானது பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் வழியாக பக்கிங்ஹாம் கால்வாய்க்குச் சென்று, பின்னர் கடலுக்கு சென்றடையும். வீராங்கல் ஓடை பொதுப்பணித் துறையின் மூலமாக தற்போது தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது.

வீராங்கால் ஓடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**நாராயணபுரம் ஏரி**

நீர்வளத்துறை மூலம் நாராயணபுரம் ஏரிக்கரையினை பலப்படுத்தும் பணிகளும், நீர் ஒழுங்கியினை சீரமைப்பு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை 2 பொக்லைன், 10 லாரிகளைக் கொண்டு கரையினை பலப்படுத்தும் பணி மற்றும் ஏரியின் நீர் ஒழுங்கியினை பொக்லைன், JCB இயந்திரங்கள் கொண்டு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், கீழ்க்கட்டளை ஏரியின் உபரி நீர் கால்வாய் பாலத்தில் மிதக்கும் தாவரங்கள் மற்றும் குப்பைகளை பொக்லைன் இயந்திரம் கொண்டு அகற்றும் பணி மற்றும் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மணல் மேட்டினை அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நாராயணபுரம் ஏரியில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகள் மற்றும் ஏரிக்கரையினை பலப்படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, மேற்காணும் பணிகள் அனைத்தையும் மாலைக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வடகிழக்குப் பருவமழையையொட்டி எடுக்கப்பட்டுள்ள மீட்பு நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 131 மி.மீ. மழை பெய்துள்ளது. மழையின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாய்ந்த 67 மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில் 300 இடங்களில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மையத்திலும் 200 நபர்கள் வரை தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை தாழ்வான பகுதிகளில் இருந்து 1360 நபர்கள் அழைத்து வரப்பட்டு 36 நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 98 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. 15.10.2024 அன்று காலை உணவு 1000 நபர்களுக்கும், மதிய உணவு 45,250 நபர்களுக்கும், இரவு உணவு 2,71,685 நபர்களுக்கும் வழங்கப்பட்டதோடு, நேற்று முன்தினம் (16.10.2024) காலை உணவு 4,16,000 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 388 அம்மா உணவகங்களில் 16.10.2024, 17.10.2024 ஆகிய தினங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டது.

சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில் போக்குவரத்து சீராக உள்ளது. நீர்தேங்கியுள்ள 542 இடங்களில் 412 இடங்களில் மழைநீர் அகற்றப்பட்டுள்ளதோடு, மீதமுள்ள இடங்களிலும் நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மழைநீரை வெளி யேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,223 மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 24 மணிநேரத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறைக்கு 6120 அழைப்புகள் வந்துள்ளன. இதன்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநில பேரிடர் மீட்புக்குழு மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சார்ந்த 8 குழுவினர் தயாநிலையில் உள்ளனர். தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மணலி, எழும்பூர், செனாய் நகர் மற்றும் பள்ளிக்கரணையிலும், மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் செனாய் நகர் 2, வில்லிவாக்கம் மற்றும் ராஜரத்தினம் அரங்கத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாநில பேரிடர் மீட்புக்குழுவைச் சார்ந்த 80 வீரர்கள், தேசிய பேரிடர் மீட்புக்குழுவைச் சார்ந்த 100 வீரர்கள், மீட்புப் படகு, இயந்திர ரம்பம், ஸ்டெக்சர் உள்ளிட்ட மீட்பு கருவிகளுடனும், சென்னையில் 103 படகுகளுடனும் மீட்புப் பணிக்கு தயார் நிலையில் உள்ளனர்.

மழைக்காலத்தினை முன்னிட்டு, பொது சுகாதாரத்துறையின் சார்பில் சென்னையில் மட்டும் நாள்தோறும் 100 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் கழிவுநீர் அகற்றும் பணிக்காக சென்னை குடிநீர் வாரியத்தின் 73 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், மற்ற மாநகராட்சி / நகராட்சி / மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட 89 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், பாதாளச் சாக்கடைகளில் அடைப்புகளை சீர் செய்வதற்கு 524 ஜெட்ராடிங் மற்றும் டீசில்டிங் இயந்திரங்கள் பணியில் ஈடுபட்டுள்ளன.

மேலும், சீரான குடிநீர் வழங்குவதற்கு நாள்தோறும் இயக்கப்படும் 453 லாரிகளுடன், கூடுதலாக 36 லாரிகள் இயக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், அசன் மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கொளத்தூர் தொகுதியில் முதல்வர் ஆய்வு!

முதல் பக்கத் தொடர்ச்சி

பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**பாலாஜி நகர் மருத்துவ முகாம்**

பருவமழை காலத்தில் பொது மக்களுக்கு நோய்தொற்றுகள் ஏற்படாமல் பாதுகாத்திடும் பொருட்டு பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் குமரன் நகர் சாலையில் உள்ள பாலாஜி நகரில் மருத்துவ முகாமினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இம்முகாமில் 12 மருத்துவர்கள் கொண்ட குழு சிகிச்சை அளித்து வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு முட்டை, ரொட்டி, பால் போன்ற அத்தியாவசியப் பொருட்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

**தணிகாசலம் கால்வாய்!**

தொடர்ந்து, அயனாவரம் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் உபரிநீர் கால்வாயில், கூடுதலாக உபரிநீர் செல்லும் வகையில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!**

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் சென்னை, பெரம்பூர், செம்பியம், ராகவா தெருவில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ. புத்துயிர் சிறப்புப் பள்ளியில் பயிலும் 70 மாற்றுத்திறனாளி குழந்தை களின் நலன் மற்றும் பள்ளியின் மேம்பாட்டிற்காக 2 கணினிகள், 1 பிரிண்டர், 2 இரும்பு பீரோ, அத்தியாவசியப் பொருட்கள், என 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களையும், அச்சிறப்பு பள்ளியின் தாளாளர் டாக்டர் எட்வின் ராஜ்குமார் அவர்களிடம் பள்ளி மேம்பாட்டிற் காக நிதியுதவியும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!**

பின்னர், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் உள்ள காமராசர் சத்திரத்தில், 600 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள், அரிசி, ரெயின் கோட், புடவை, பெட்ஷீட் (போர்வை), ரஸ்க், பால் பவுடர், துவரம் பருப்பு, மிளகாய்த்தூள், சமையல் எண்ணெய், லுங்கி உள்ளிட்ட 10 அத்தியாவசியப் பொருட்களை வழங்கி, தூய்மைப் பணியாளர்களுக்கு பிரியாணியுடன் கூடிய மதிய உணவினை முதலமைச்சர் அவர்கள் அன்புடன் பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மாஸ்டர் பெ.சேகர் தொகுத்த ‘கலைகளின் இதயம் கலைஞர்’ நூல் வெளியீடு!

# தி.மு.க. தொண்டரணி நடத்தும் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – ஆர்.எஸ்.பாரதி – அந்தியூர் செல்வராஜ் எம்.பி. பங்கேற்பு!

*சென்னை, அக். 18-*

*தி.மு.க. தொண்டரணி நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - மாஸ்டர் பெ.சேகர் தொகுத்த 'கலைகளின் இதயம் கலைஞர்' நூல் வெளியீட்டு விழா 20.10.2024 - ஞாயிறு மாலை 5 மணியளவில் இராஜா அண்ணாமலைபுரம் - முத்தமிழ்ப் பேரவை - திருவாவடுதுறை டி.ஆர். இராஜ ரத்தினம் கலை அரங்கத்தில் நடைபெறுகிறது.*

*விழாவிற்கு மாநில தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் வரவேற்புரையாற்றுகிறார்.*

*ஜி.சுகுமாறன், ப. கோமான், சுப.சரவணன், ஆவின் எம்.ஆறுமுகம், எஸ்.எம்.அன்பழகன், பி.எம்.முனிவேல், மாஸ்டர் இ.குருதாஸ், எல்.முரளி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இவ்விழாவிற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையேற்று நூலை வெளியிடுகிறார்.*


*காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., முதல் நூலையும், மாம்பலம் ஆ. சந்திரசேகர் இரண்டாம் நூலையும் பெறுகின்றனர்.*

*இவ்விழாவில் ஆர்.எஸ். பாரதி, அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., அன்பகம் கலை, டி.கே.எஸ்.இளங்கோவன், மயிலை த.வேலு எம்.எல்.ஏ., புலவர் வெற்றியழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*இவ்விழாவில் இரா. மோகனசுந்தரம், கே.ஆர். குமார், ம.கணேஷ், கே. கலையரசன், க.இரமேஷ், இரா.மணி, மா.ஆனந்தன், முருகானந்தம், தென்றல் ரமேஷ் (எ) எஸ்.தியாகராஜன், எம்.ஆர்.சசிக்குமார், எம்.சிவக்குமார் (எ) ஜிம் சிவா, ந.க.ஈஸ்வரமூர்த்தி, பி.விஜயகுமார், வே.இராஜேஷ், எஸ்.சுள்ளான் (எ) ராஜேந்திரன், ஜி.செல்லமுத்து (எ) சுமன், சா. சௌந்தரராஜன், ஜெகஜீவன்ராம், எச்.ஜான் தினகரன், டி.ஜெய் கணேஷ், மு.கருணாகரன், கவேலாயுதம் உள்ளிட்ட தொண்டரணி மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.*

*பார்த்திபன், பா.பொன்னுசாமி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; “ நீட் எழுதாமலே எடப்பாடி ஆட்சியில் 5000 டாக்டர்கள்” என்று திண்டுக்கல் சீனிவாசன் பேசியிருக்கிறாரே?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; நீட் தேர்வு தமிழ் நாட்டுக்குள் நுழைந்ததே எடப்பாடி ஆட்சியில்தானே!**

**உண்மைநிலை இப்படி இருக்க சீனிவாசன் ஏன் இப்படி அளந்து விடுகிறார் ?**

**எடப்பாடி கட்சியில் சீனிவாசன் இருக்கும் வரை, இப்படிப்பட்ட நகைச்சுவைக்கு அங்கே பஞ்சம் உண்டோ ?**

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### புதுக்கோட்டையில்

# வாக்காளர்களுக்கு நன்றி!

### டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. கூறினார்!

புதுக்கோட்டை, அக். 18 –

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகராட்சி வார்டு எண் 11க்கு உட்பட்ட பகுதிகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வீடு வீடாகச் சென்று பொதுமக்களை சந்தித்து கழக அரசின் மூன்றாண்டு கால சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி தொடர்ச்சியாக நடைபெற்ற தேர்தலில் கழகத்திற்கு வாக்களித்தமைக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

பொதுமக்களின் அடிப்படை வசதிகளை கேட்டறிந்தும், பொதுமக்கள் அளித்த சாலை வசதிகள், கழிவு நீர் வாய்க்கால்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காண உடன் வருகை புரிந்த அரசு அதிகாரிகளிடம் உடனடியாக பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தர வலியுறுத்தினார்.

இதில் வர்த்தக அணி மாநில துணைச் செயலாளர் அசோக் பாண்டியன், ரவிஸ் ரவி, கலையரசன், மாமன்ற உறுப்பினர்கள் மதியழகன், பால்ராஜ், தடாம்பட்டி அன்புச்செல்லம், துரை கமல் சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் பலரும் உள்ளனர்.